**செய்தி வெளியீடு எண்: 668** **நாள்: 15.09.2018**

**திராவிட ஆய்வியல் நிறுவன துவக்க விழாவில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்**
**ஆற்றிய உரை – நாள் 15.9.2018**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

திராவிட உணர்வோடும், மொழிப் பற்றோடும்
இந்த இனிய விழாவில் குழுமியிருக்கின்ற
உங்கள் அனைவரையும் சந்திப்பதில்
நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

புனித பீட்டர் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
திராவிட ஆய்வியல் துவக்க விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு
சிறப்பான கருத்தை எடுத்துரைத்த
மாண்புமிகு துணை முதலமைச்சர்
**திரு. ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

இந்த சிறப்பு நிகழ்ச்சிக்கு அடித்தளமாக விளங்கிய
மாண்புமிகு நாடாளுமன்ற துணைத் தலைவர்
**மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய டாக்டர் மு.தம்பிதுரை** அவர்களே!

மிகச் சிறப்பாக, அழகாக பல்வேறு கருத்துக்களை
எடுத்துரைத்து அமர்ந்திருக்கின்ற
கேரள அரசின் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு. என்.கே.பிரேமசந்திரன்** அவர்களே!

நிகழ்ச்சியிலே ஆழமான கருத்தை இங்கே பதிவு செய்த
நாடாளுமன்ற உறுப்பினர் **திரு. சத்பதி** அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்று கருத்துக்களை வழங்கிய
நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு. முகமது பஷீர்** அவர்களே!

நிகர்ச்சியிலே பங்குபெற்று சிறப்பான கருத்துக்களை வழங்கிய
மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு. டி. குபேந்திர ரெட்டி** அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
திரு.திண்டுக்கல் சீனிவாசன் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

திராவிட இயல் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநருமான
**திரு. எ. ரபி பெர்னார்ட்** அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற
புனித பீட்டர் நிறுவன அறங்காலர் அவர்களே!

வருகை தந்துள்ள பேராசிரியப் பெருமக்களே,
மாணவர்களே, மாணவிகளே,

உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின்
பதிவாளர் முனைவர் **எல்.மகேஷ்குமார்** அவர்களே!

வருகை தந்துள்ள பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கத்தை
தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த சிறப்பான விழா நடைபெறுவதற்கும்,
நாம் அனைவரும் இங்கே எழுச்சியுடன் ஒன்று சேர்ந்து
இவ்விழாவில் பங்கேற்பதற்கும் காரணமானவர் யார் ?

நம்மைப் போன்று எண்ணற்றோர் எழுச்சியும்,
ஏற்றமும் பெறுவதற்கு விதைபோட்டு,
நீர்ஊற்றி, இயக்கமாய் வளர்த்து எடுத்தவர் யார் ?
நம்மை எல்லாம் இப்பாதைக்கு அழைத்து வந்த
அறிவுலக ஆசான், தமிழ்த்தாயின் அன்பு மகன்
**பேரறிஞர் அண்ணா** அவர்கள் அல்லவா !

அன்னாருடைய பிறந்த நாளான இன்று,

திராவிட ஆய்வியல் நிறுவன துவக்க விழா நடைபெறுவது மிக்க
பொருத்தமானதும், சிறப்பானதும் ஆகும்.
அதில் நான் பங்கேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இருபதாம் நூற்றாண்டு – தமிழ் நாட்டிலும்,
பிறகு தென்னகம் முழுவதிலும் ஏற்படுத்திய,
ஈடு இணை இல்லாத சமூக புரட்சிக்கு களப்பணி ஆற்றிய நம் வழிகாட்டி,
ஆசான், அன்பு அண்ணன் **பேரறிஞர் பெருந்தகை அண்ணா** அவர்கள்
ஏற்றி வைத்த கொள்கை தீபத்தை
வாழ்க்கை என்னும் தொடர் ஓட்டத்தில்,
கரங்களில் ஏந்தி ஓடும் வீரர்களாக
இங்கே நாம் சேர்த்திருக்கிறோம்.

இனமும், மொழியும் காக்கப்படுவதற்காக
**பேரறிஞர் அண்ணா அவர்கள்** ஆற்றிய
அரும்பணிகளைப் பற்றிய ஆய்வுகளையும்
திராவிட இயல் ஆய்வு நிறுவனம் மேற்கொள்ள வேண்டும் என்று உரிமையோடு
கேட்டுக் கொள்கிறேன்.

**பேரறிஞர் அண்ணா** அவர்களின் பொதுவாழ்வு காலத்தில், இளம்
சமூகத்தினரிடம் இருந்த
இனப் பற்றும், மொழிப்பற்றும் இன்றைக்கும்
நிலவிட வேண்டும் என்பதில் தணியாத தாகம் கொண்ட அண்ணாவின்
தம்பியாக, இந்த கருத்தினை
திராவிட இயல் ஆய்வு நிறுவனத்தின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**ஆதிசங்கரர்** வட நாட்டிற்கு பயணம் செய்த போது,
அங்கே இருந்தவர்கள்,
**“நீங்கள் யார் ?” –** என கேள்வி கேட்ட போது,
அவர், தன்னை திராவிட சிசு என முழங்கியதாக
வரலாறு கூறுகிறது.

திராவிடம் என்றால் **‘திரவம்’** மற்றும்
**‘விடா’** என்ற சொற்களின் சங்கமம் எனவும்,
அது மூன்று கடல்கள், அதாவது –
**வங்காள விரிகுடா, இந்தியப் பெருங்கடல்**
**மற்றும் அரபிக் கடல்** சந்திக்கும் இடம் எனவும் ஆராய்ச்சியாளர்கள்
கூறுகின்றனர்.

திராவிட மொழிகளின் தாயகமாக விளங்குவது
தமிழ் மொழி. – **'தமிழும்'** என்பதுதான்
காலத்தால் மாறி மாறி கடைசியில்
'திராவிடம்' எனத் திரிந்ததாக
**மொழிஞாயிறு தேவநேயபாவாணர்** கூறுவார்.

தென்னிந்தியாவின் மற்ற திராவிட மொழிகளின்
இலக்கியங்கள் கி.பி.8ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தான்
தோன்றியிருக்கிறது. ஆனால் தமிழ் இலக்கியத்திற்கு
30 நூற்றாண்டுக்கு மேற்பட்ட ஆதார வளம் உள்ளது.

அத்தகைய பழமையும், வளமையும்
கொண்ட மொழி தமிழ் மொழி.
தமிழ் மொழி மிகவும் மூத்த மொழி,
முதன்மையான மொழி.

எந்த மொழியின் துணை கொண்டும் இயங்காமல்,
தனி சொற்களைக் கொண்டு தனித்து இயங்கக்கூடிய
ஒரு தனி மொழி என்பதை ஆராய்ச்சி மூலம்
நிரூபிக்க வேண்டிய கடமையும், அவசியமும்
தமிழர்களுக்கு ஏற்பட்டது.

**திரு. சுவாமிநாத அய்யர்** முதற்கொண்டு
**திரு. ச. அகத்தியலிங்கம்** வரை பல அறிஞர்கள்
திராவிட மொழிகளைப் பற்றி ஆய்வு செய்தார்கள்.
தென்னிந்திய மொழியை ஆய்வு செய்த ஐரோப்பியர்களில்
குறிப்பிட்ட ஒரு சிலரில், 1816ஆம் ஆண்டு
சென்னை மாவட்ட ஆட்சியராக இருந்த
**திரு.பிரான்சிஸ் ஒயிட் எல்லீஸ்** முதற் கொண்டு,
ஜி.யு.போப் வரை பலரும் திராவிட மொழிகளைப்
பற்றி ஆராய்ச்சி செய்தார்கள்.

ஆனாலும், **டாக்டர் ராபர்ட் கால்டுவெல்**
1856ஆம் ஆண்டு திராவிட மொழிகளின்
ஒப்பிலக்கணத்தை எழுதி, தமிழ் மொழி தனித்து
இயங்கக் கூடிய தன்மை உடையது என்பதை
உலகுக்கு உணர்த்தினார்.
பெயர்களில் உயர்திணை அஃறிணை என்று
திராவிட இலக்கண ஆசிரியர்கள் வகுத்த முறை
உலகில் வேறெந்த மொழிகளிலும் இல்லையென்று

**ராபர்ட் கால்டுவெல்** போற்றியிருப்பது
நமக்கு பெருமையல்லவா **?**

குறிப்பாக,
**தமிழ் மொழியை ராபர்ட் கால்டுவெல்** அவர்களும், **தெலுங்கு மொழியை C.D. பிரௌன்** அவர்களும், **கன்னட மொழியை F. கிட்டல்** அவர்களும்,
**மலையாள மொழியை டாக்டர் கென்டர்ட்**
அவர்களும் ஆராய்ந்தனர்.
மொழி ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சி செய்து
கண்ட உண்மை என்னவென்றால்,
பழைய தமிழ்மொழி –
**வேங்கடமலைக்கு வடக்கே தெலுங்காகவும்,**
**மேற்கே கன்னடமாகவும்,**
**சேர நாட்டில் மலையாளமாகவும்**
திரிந்தன என்பதுதான்.

**திரு. பிரான்சிஸ் ஒயிட் எல்லீஸ்** அவர்கள்
திராவிட மொழித் தொகுப்பு உலகத்திலேயே முக்கிய
மொழித் தொகுப்பாக விளங்குகிறது எனவும்,
அத்தொகுப்பில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கோன்டிஸ், ப்ராவி, குடகு உட்பட பல மொழிகள் இடம் பெற்றுள்ளன எனவும் கூறியுள்ளார்.

இம்மொழிகள் பேசப்பட்ட இடங்களில் சோழர்கள்,
பாண்டியர்கள், சேரர்கள், ராஷ்டிரகூடர்கள் பல்லவர்கள்,
விஜயநகரர்கள், சாளுக்கியர்கள், நாயக்கர்கள் உட்பட
பல பேரரசுகள் கோலோச்சின.
சோழர்களின் திராவிட சிற்பக் கலைக்கு
முத்தாய்ப்பாக விளங்குகின்ற **'நடராஜர் சிலை'**
உலகளவில் இந்து மதத்திற்கே ஒரு அடையாளமாக விளங்குவதோடு, குறிப்பாக
அண்ட சராசரம் எவ்வாறு உருவானது என ஆராய்ச்சி செய்யும்
ஜெனிவாவிலுள்ள CERN என்ற
ஐரோப்பிய துகள் இயற்பியல் ஆராய்ச்சி மையத்தின்
முகப்பில் வீற்றிருப்பது, திராவிட கலைக்கே கிடைத்த
தனிப் பெருமையாகும்.

வேதங்களில் மிகவும் தொன்மையானது
**ரிக் வேதமாகும்.** அந்த ரிக் வேதத்திலேயே,
திராவிட மொழிகளிலிருந்து பல சொற்கள்
எடுத்து பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதிலிருந்து திராவிட மொழிகளின்
தொன்மையும், பெருமையும் புலப்படுகிறது.

மேலும், உலகில் மிகவும் பழமையான நாகரிகமாகக் கருதப்படும் சிந்து சமவெளி நாகரிகமே
திராவிட நாகரிகமாகும் என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன.
குறிப்பாக, 2007ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டம்
மயிலாடுதுறையில் சிந்துசமவெளி எழுத்துக்கள் பொறித்த **கற்கோடாரி** ஒன்று கிடைத்துள்ளது.

சமீபத்தில் காவேரி கழிமுகப்பகுதியில் நடந்த
அகழ்வாராய்ச்சியில், பத்துக்கும் மேற்பட்ட
**முதுமக்கள் தாழிகள்** கண்டுபிடிக்கப்பட்டன.
இந்த முதுமக்கள் தாழிகளில் காணப்பட்ட
சில குறியீடுகள், சிந்து சமவெளியிலுள்ள
ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில்
கண்டு எடுக்கப்பட்ட குறியீடுகளைப் போன்றே உள்ளன
என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்து இருக்கின்றனர்.

இதன்மூலம் திராவிட நாகரிகமும், திராவிடமொழிகளும்
மிகமிகத் தொன்மையானது என்பதை நாம் அறிகிறோம்.
திராவிட மொழிகளில் திருந்திய மொழிகளாக அறியப்பட்ட 6 மொழிகளில், தமிழ், தெலுங்கு,
மலையாளம், கன்னடம் ஆகிய 4 மொழிகள்
பெருமொழிகள் என அழைக்கப்பட்டன.
இந்த 4 மொழிகளும் இலக்கண வகையில்
ஒரே பண்புகளைக் கொண்டுள்ளன என்றும்;
ஒலியியல், சொல்லியல், தொடரியல்,
சொற்களஞ்சியம், பொருண்மை ஆகியவற்றில்
ஒத்து இருக்கின்றன என்றும் கருதப்பட்டது.
**மொழி** என்பது – பண்பாட்டின் அடித்தளமாகவும்
அடையாளமாகவும் விளங்குகிறது.

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு பண்பாடு இருக்கிறது.
**சிந்து சமவெளி நாகரிகம்,**
**மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம்**
ஆகியவற்றை ஏற்படுத்தி, சிந்து, பஞ்சாப் பள்ளத்தாக்குகளில் திராவிடர்கள்
நாகரிகத்துடன் வாழ்ந்து வந்தார்கள் என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன.
தகவல் தொழில் நுட்பம் இல்லாத காலத்திலேயே
திராவிட மொழி, பண்பாடு, கலாச்சாரம்

உலக அறிஞர்களை கவர்ந்திருக்கிறது என்றால்,
தகவல் தொழில் நுட்பத்துடன் தம்மை இணைத்துக் கொண்ட நமது திராவிட மொழிகளும், திராவிடர்களும்
எந்த அளவிற்கு உலகம் முழுவதும் பரவி வாழ வேண்டும்
என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

**திராவிடர்களாகிய நாம்,**
**மொழியாலும், நாகரிகத்தாலும்,**
**பண்பாட்டாலும், உணர்வாலும் ஒன்று பட்டிருக்கிறோம்**
**என்று பெருமைப்பட்டு கொள்வதை மட்டுமே**
**போதுமானதாக நான் கருதவில்லை.**
**அதையும் தாண்டி நமது திராவிட மாநிலங்களிலுள்ள**
**இயற்கை கொடைகளான, மிகை நீரையும்,**
**மிகை மின்சாரத்தையும், உற்பத்தியாகின்ற உணவையும், மாநிலத்திற்கு மாநிலம்**
**பகிர்ந்து உதவ வேண்டும்.**
**இவை தான் திராவிடத்தின் உண்மையான ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் என**
**தெரிவித்துக் கொள்கின்றேன்.**

திராவிட மாநிலங்களுக்கிடையே பொதுவான
இயற்கை வளங்களை பகிர்ந்து கொள்ளும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை
இப்போது துவங்கப்பட்டிருக்கின்ற திராவிட இயல் ஆய்வு நிறுவனம்
தனது பணியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
அப்போதுதான் இந்த நிறுவனம் துவங்கியதற்கான நோக்கம் முழுமையாக வெற்றி பெறும்.
தென்னகத்தைச் சார்ந்த நாம்,
மொழிக் குடும்பத்தாலும், பண்பாட்டாலும்
ஒத்த உணர்வு கொண்டவர்கள்.

நாம் அனைவரும் **திராவிடம்** என்ற
ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதை
நமது ஒற்றுமையின் மூலமே உலகுக்கு
உணர்த்த வேண்டும்.
அதற்கு எத்தனை வழிமுறைகள் உண்டோ,
அதையெல்லாம் நாம் கையாள வேண்டும்.
அதற்கு ஒரு உதாரணத்தை நான் இங்கே
குறிப்பிட ஆசைப்படுகின்றேன்.

தீபகற்ப நதிகள் இணைப்பு திட்டத்தின் கீழ்

மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு,
பாலாறு, காவேரி, வைகை, குண்டாறு மற்றும்
பம்பா அச்சன்கோவில் வைப்பாறு நதிகளை இணைக்கும் திட்டங்களை
செயல்படுத்த திராவிட நாடுகளைச் சார்ந்த நாம் ஒன்றிணைந்து முயற்சிகளை
மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு முன்னுதாரணமாக மாண்புமிகு
புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்
தனது ஆட்சிக் காலத்தில் சென்னைக்கு
கிருஷ்ணா நதியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை, அப்போதைய
ஆந்திர மாநில முதலமைச்சராக இருந்த **திரு.N.T. ராமாராவ்** அவர்களின்
ஒத்துழைப்போடு செயல்படுத்தினார்.
இது திராவிட மாநிலங்களுக்கிடையே ஒற்றுமை உணர்விற்கு ஒரு உதாரணமாக
அமைந்தது என்பதை பெருமையோடு இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன்.

நமது தமிழ்நாட்டிற்குள் ஓடும் நதிகளைக் கொண்டு
நதிநீர் இணைப்பு திட்டத்தை சாத்தியப்படுத்த
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு
எப்படி செயல்படுகிறதோ, அதே போல்
தென்னக நதிகளை இணைக்கும் திட்டத்திலும்
அண்டை மாநிலங்களோடு தமிழ்நாடும்
தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும்
என்று நான் உறுதியாக கூறுகின்றேன்.

இன்று தொடங்கப் பெற்றிருக்கின்ற
திராவிட இயல் ஆய்வு நிறுவனம்,
திராவிட கலாச்சாரம், பண்பாடு, மொழியின் வளம்
ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வை
இளைய தலைமுறையினரிடையே ஏற்படுத்த வேண்டும்.
அதற்காக பேரறிஞர் அண்ணாவின் படைப்புகள் மற்றும்
தந்தை பெரியாரின் சமூக நீதி சிந்தனைகளை
மாணவர்களிடையே பரப்ப வேண்டும்.

திராவிட உயர்வுகளையும், உணர்வுகளையும்
மக்களிடையே பிரதிபலிக்க, இந்த நிறுவனம்
ஒரு செய்தி இதழை தொடங்க வேண்டும்.
திராவிடம் சார்ந்த புரிதல் மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும் என்பதற்காக
பள்ளி, கல்லூரி மாணாக்கர்களிடையே பேச்சுப் போட்டி,
கவிதைப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளை

இந்த நிறுவனம் நடத்த வேண்டும்.

மாதம் இருமுறை வெவ்வேறு ஊர்களில்
திராவிடர்களிடையே ஒற்றுமையையும், உணர்வையும்
ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு
பன்னாட்டு அறிஞர்கள் கலந்து கொள்ளும் வகையில்
கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும்.

உலகத்தின் பல பகுதிகளில் உள்ள
திராவிட ஆராய்ச்சி மையங்களிலிருந்து வெளிவரும்
ஆராய்ச்சிக் கட்டுரைகளை இந்த நிறுவனம்
மாணவர்களிடையே கொண்டு செல்ல வேண்டும்.

பெண்கள் விடுதலைக்கும், பெண்களின் பாதுகாப்பிற்கும் இந்த நிறுவனம்
அரணாக இருப்பதுடன், எழுச்சிக்கான சிந்தனைகளை விதைக்க வேண்டும்.
இவை போன்ற செயல்களால், இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நோக்கம் நிச்சயம்
வெற்றியடையும்.மொழிதான் ஒரு நாட்டின் பண்பாட்டையும்,
கலையையும் உலகுக்கு தெரிவிக்கும் வழியாகும்.

திரைப்பாடல்கள் மூலம் மக்களுக்கு
பல பாடங்களைப் புகட்டிய மாண்புமிகு புரட்சித்தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள்;
**சிறுவர்களுக்கு அறிவுரை கூறும் ஒரு பாடலில்**
**“விழிபோல எண்ணி**
**நம் மொழி காக்க வேண்டும்”**
என்ற பாடல் வரி மூலம்
மொழிப் பற்றின் அவசியத்தை வருங்கால சந்ததியினருக்கு எடுத்துரைத்து
உள்ளார் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

நாட்டை ராணுவ வீரர்கள் காப்பதைப் போல –
நமது பண்பாட்டை நமது தாய்மொழிதான்
காத்து வருகின்றது.
மொழிப் பற்றுதான், மொழி பாதுகாப்பிற்கும், வளர்ச்சிக்குமான உணர்வை
நமக்கு ஏற்படுத்தும்.
மன்னர்கள் ஆட்சிக் காலத்திலிருந்து
இன்றைய மக்கள் ஆட்சிக் காலம் வரை
மொழியை வளர்த்த ஆட்சியாளர்கள்தான்
மக்களால் போற்றப்படுகிறார்கள்;
நிலைத்து வாழ்கிறார்கள்.

அந்த வகையில் தாய் மொழியை பாதுகாப்பதில்
மற்ற நாட்டினருக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்
நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.
தஞ்சை பல்கலைக் கழகத்தை நிறுவியவர்
மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர்
எம்.ஜி.ஆர் அவர்கள்.

அதற்கு புத்துணர்ச்சியும், புதுப் பொலிவும் கொடுத்தவர்
மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.
மதுரையில் உலகத் தமிழர்களை
ஒரே குடையின் கீழ் ஒருங்கிணைக்கும் வகையில்
உலகத் தமிழ் சங்கத்தை நிறுவ ஆணையிட்டவர்
மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர்
எம்.ஜி.ஆர் அவர்கள்.

அதனை **33.25** கோடி ரூபாய் செலவில்
**14.15** ஏக்கர் நிலப்பரப்பில் பெருந்திட்ட வளாகமாக கட்டி
தொடங்கி வைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்
சீனம் மற்றும் அரபு மொழிகளில்
**திருக்குறள், மகாகவி பாரதியார் மற்றும்**
**பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களும்,**
**திருக்குறளை** கொரிய மொழியிலும்,
**ஆத்திசூடி** – சீனத்திலும் மொழி பெயர்க்கப்பட்டன.

மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச் சென்ற
தமிழ்ப் பணியை தலையாய பணியாகக் கருதி மாண்புமிகு அம்மாவின் அரசு
மிகக் குறுகிய காலத்தில் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.
அவற்றையெல்லாம் முழுமையாக குறிப்பிட நேரம் போதாது. எனவே ,
நேரமின்மையின் காரணமாக தென்னகத்தைச் சார்ந்த பாராளுமன்ற
உறுப்பினர்கள் குழுமியிருக்கின்ற இந்த விழாவில் மிக முக்கியமான திட்டங்களை
மட்டும் சுட்டிக் காட்டுவது
மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

தமிழர்களுடைய கலை, இசை, பண்பாடு,
சித்த மருத்துவம், கட்டடக் கலை, அறிவியலுடன் கூடிய ஆன்மிக சிந்தனை
ஆகியவற்றை
உலகம் முழுவதும் பரப்பும் வகையில்
உலகப் புகழ் பெற்ற ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில்

தமிழ் இருக்கை அமைக்க,  தமிழ்நாடு அரசு 10 கோடி ரூபாய் வழங்கி உள்ளதை
இங்கே நான் பெருமையுடன் கூறிக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

அறிவியல் முன்னேற்றத்தால் ஏற்பட்டுள்ள
நவீன தொழில் நுட்பத்திற்கு ஈடுகொடுக்கும் அளவிற்கு
பல புதிய புதிய சொற்களை உருவாக்கினால்தான்
தமிழின் சொல் வளத்தை காக்கவும், வளர்க்கவும் முடியும்
என்பதை கருத்தில் கொண்டு 28.6.2018 அன்று
தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி எண் 110-ன் கீழ்
**'சொற்குவை'** என்ற ஒரு திட்டத்தினை
நான் அறிவித்தேன்.

இந்த **சொற்குவை** திட்டத்தின் மூலம் சுமார்
10 லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்களை தொகுத்து,   நிரல்படுத்தி,
அவற்றை
இணையதளம் வழியாக,  பொது வெளியில்
உலகெங்கும் உள்ள தமிழறிஞர்களும்,
தமிழ் ஆர்வலர்களும், மொழியியல்  ஆராய்ச்சியாளர்களும் பயன்படுத்திக்
கொள்ளும் வகையில் வெளியிடப்பட உள்ளது.
இதற்காக ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய்
தொடர் செலவினமாக மாண்புமிகு அம்மாவின் அரசு
ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை
இங்கே நான் பெருமையாகக் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, தமிழுக்கு தொண்டாற்றும்
தமிழறிஞர்களை ஊக்கப்படுத்த, முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு
65 விருதுகளை மாண்புமிகு அம்மாவின் அரசு
வழங்கி வருகின்றது.  தாய்மொழியின் மீது ஈடுபாட்டை ஏற்படுத்தும் வகையில்
பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கட்டுரை, பேச்சு,  கவிதைப் போட்டிகளை
நடத்தி
பரிசுகள் வழங்கப்படுகின்றன.

தமிழில் வெளிவரும் சிறந்த பல துறை நூல்களுக்கு பரிசுகள் மற்றும்  நூல்களை
வெளியிட
நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன.இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.
எனவே, திராவிடம் என்பதை தாரக மந்திரமாக்கிக் கொண்டு,  நாம் திராவிடர்கள்,
நம் மொழி
திராவிட மொழி,  திராவிடத்தால்
தென்னக நாடுகளைச் சார்ந்த நாம்
ஒரே குடையின் கீழ் ஒற்றுமையாக

வாழ்ந்து வந்தோம், வருகிறோம், வருவோம் என்பதை
உறுதிப்படுத்தும் வகையில்,
இந்த திராவிட ஆய்வியல் நிறுவனம் திறம்பட
உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
திராவிட ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில்,
இந்த சிறப்பான விழாவை ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களை நான்
பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன். அண்டை மாநிலங்களிலிருந்து வருகை தந்துள்ள
பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எனது நன்றியை
தெரிவித்துக் விடை பெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**